**வருகின்ற 2019-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30ம்தேதி திங்கட் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் சாதாரண கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.**

**முன்னிலை: திரு.S.M.பாரிஜான் பி.ஏ.,**
**தனி அலுவலர் (ம) ஆணையாளர்**

1. இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் உள்ள 2 Micro Composting Centre-களுக்கும், மக்கும் குப்பைகளை கையாளத் தேவையான 33" X 21" அளவுள்ள 22 gauge தடிமன் 100 கிலோ கொள்ளளவு கொண்ட Wheel Barrow - 10 No's விநியோகம் செய்யும் பணிக்கு ஏற்கனவே இந்நகர்மன்ற தீர்மானம் எண். 153, நாள்: 28.06.2019-ல் ஒப்புதல் வழங்கியுள்ளது. இதன் பேரில் 04.09.2019-ல் இப்பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்தப்புள்ளியாளரின் விபரம் | ஒரு Wheel Barrow ஒன்றிற்கான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|
| 1 | S. பாலசுப்ரமணியன்,<br>43, பழனிபுரம் 3வது வீதி,<br>பவானி. | ரூ.6700/- |
| 2 | P.A.செல்லப்பன்,<br>49, பழனிபுரம் 3வது வீதி,<br>பவானி. | ரூ.6900/- |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் கண்டுள்ள M/S S. பாலசுப்ரமணியன், 43, பழனிபுரம் 3வது வீதி, பவானி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மற்றொன்றை விட குறைவாக உள்ளதால் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 540/2019/எச்1)

2. தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடும் பணிக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களால் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு ஆள் வெளிக்கொணர்வு முகமை மூலம் இந்நகராட்சிக்கு ஏழு பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர் ஒருவர் என்ற அடிப்படையில் SKY Manpower Agencies, திண்டுக்கல் நிறுவனத்தினர் மூலம் 30.11.2018-ஆம் தேதி வரை பணியாளர்கள் பெற்று பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க. எண். 26458/2016/P1, நாள்: 13.11.2018 ஆம் தேதியிட்ட உத்திரவின் படி மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த காலம் 31.08.2019 ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க. எண். P1/26458/2016, நாள் : 11.09.2019-ஆம் தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மேற்படி ஒப்பந்த பணிகாலத்தினை 01.09.2019-ஆம் தேதியிலிருந்து 31.03.2020 ஆம் தேதி முடிய கால நீட்டிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, அப்பணியாளர்களை இந்நகராட்சியில் தொடர்ந்து 01.09.2019-ஆம் தேதி முதல் 31.03.2020-ஆம் தேதி வரை தொடர்ந்து SKY Manpower

Agencies, திண்டுக்கல் நிறுவனத்தினரிடமிருந்து பணியாளர்களைப் பெற்று IEC பணிகளை மேற்கொள்வதற்கும், அதற்காகும் செலவினத்தினை தற்போது SBM திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அரசிடம் இருந்து 2019-20 ஆண்டிற்கு பெறப்படும் தொகையிலிருந்து பின்னர் சரி செய்து கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.638/2018/எச்1)

3. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கல் துறை ( MC1) அரசாணை எண்.2 நாள்: 05.06.18 -ல் குறிப்பிட்டுள்ளபடி, பவானி நகராட்சிக்கு சொந்தமான இடங்களில் விளம்பரம் செய்ய இடம் தேர்வு செய்வது குறித்து விளம்பர பலகைகள் நிறுவுவதற்கான முறைப்படுத்துதல் குழு கூட்டம் 25.9.2019 அன்று நடைபெற்றது. மேற்கண்ட கூட்டத்தில் பவானி நகராட்சிக்குச் சொந்தமான இடங்கள் குறித்து விவாதிக்கப்பட்டு நகராட்சிக்குச் சொந்தமான இடங்களில் பவானி நகராட்சி புதிய பேருந்து நிலையத்தின் முன்புறம் ( மேட்டூர் மெயின் சாலை ) மேற்கூரையிலும் பஸ் நிலையத்தின் உட்புறம், தென்புறம் மற்றும் வடபுறம் பஸ்நிறுத்துமிடங்களின் மேற்கூரையிலும் அம்மா உணவகம் அருகிலும், அரசாணைகளில் தெரிவிக்கப்பட்ட விதிமுறைகளின்படி நிரந்தரமாக பேனர் வைக்க இடத்தினை முடிவு செய்து நிரந்தர விளம்பர பலகைகள் நிறுவுவதற்கான முறைப்படுத்துதல் குழு கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

மேலும் மேற்கண்ட நிரந்தர விளம்பரங்கள் நிறுவ நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( MC1) துறை அரசாணை எண். 17, நாள்: 31.01.2019 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண். 39, சென்னை வியாழக்கிழமை ஜனவரி 31.01.2019அன்று நகராட்சிக்குச் சொந்தமான இடங்களில் விளம்பரங்கள் நிறுவுவதற்கு நகராட்சியின் பிரதான சாலைகள், தெருக்கள், சந்து மற்றும் பாதைகள் ஆகியவற்றின் அகலத்திற்கு ஏற்ப விளம்பர பேனர்களின் நீளம் மற்றும் அகலம் குறிப்பிடப்பட்டு அதன் அளவுகள் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

விதி எண். 6 -ல் துணை விதி(1) ன்படி விளம்பர பலகைகள் நிறுவுதல் அதிகபட்ச அளவுகளுக்கான அட்டவணை கீழ்கண்டவாறு

| வ. எண் | சாலை அகலம் / சாலை பாதைகள் | அதிகபட்ச அளவு | சாலை சந்திப்பில் இருந்து நிறுவுதல் துாரம் |
|---|---|---|---|
| 1 | எந்த ஒரு சாலையில் உள்ள கடைகள் | 3அடி X கடைகளின் அகலம் | பொருந்தாது (Not Applicable) |
| 2 | 50அடி / 4 பாதைகள் (lanes) | 20அடி x 10அடி | 100 m |
| 3 | 80அடி / 6 பாதைகள் (lanes) | 30 அடி x 15 அடி | 100 m |
| 4 | 120 அடி மற்றும் / அதன் அகலத்திற்கு மேலும் | 40 அடி x 20 அடி | 100 m |

மேற்கண்டவாறு நிரந்தர விளம்பர பலகைகள் நிறுவ அளவுகள் நிர்ணயம் செய்யப்பட்டு அதன் கால அவகாசம் மற்றும் உரிமக்கட்டணங்கள் மற்றும் விண்ணப்ப கட்டண விகிதங்கள் கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

1. மேற்கண்ட அரசாணையின் விதி எண். 12-ன்படி நகராட்சிப்பகுதியில் விளம்பரங்கள் அங்கீகாரம் செய்யப்பட்ட பகுதியில் நிறுவ விண்ணப்பக்கட்டணம் மற்றும் உரிமக்கட்டணம் புதுப்பித்தல் ரூ.1000/- ( ஒரு முறை விண்ணப்பிக்க மட்டும் )

2. அரசாணை விதி எண்.11ன்படி விளம்பரபலகை நிறுவ அனுமதி மறுக்கப்படும் பட்சத்தில் அரசிற்குமேல் முறையீடு செய்ய கட்டணம் ரூ.1000/- ( ஒரு முறை விண்ணப்பிக்க மட்டும் )
3. அரசாணை விதிஎண். 13-ன்படி விளம்பரங்கள் உரிமக்கட்டணம்

(அ) நகராட்சிப்பகுதிகளில் உள்ள நகராட்சியின் பிரதான சாலைகளில் விளம்பரங்கள்
நிறுவ ரூ.6000/- மட்டும்

(ஆ) நகராட்சியின் பிற சாலைகள் மற்றும் குறுக்கு சாலைகளில் விளம்பரங்கள்
நிறுவ ரூ.4,000/- மட்டும் என்றவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

பவானி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் நகராட்சிக்குச் சொந்தமான இடங்களில் விளம்பரங்கள் நிறுவ விளம்பரங்களுக்கு ஏற்றவாறு விளம்பரங்கள் செய்ய அனுமதி வழங்குவதற்கான விதிகள் 2003 பிரிவு 7(-2) ன் கீழ் உத்தேச இடத்திற்கு ஒர சதுர மீட்டருக்கு (1.00 sqm)ஒரு வருடத்திற்கு நில வாடகை நிர்ணயம் செய்ய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி நகராட்சி இடத்தில் விளம்பரம் செய்ய ரூ.100/- 1சதுர மீட்டருக்கு என நிர்ணயம் செய்யவும், மேலும் மேற்கண்ட அரசாணைகளில் தெரிவிக்கப்பட்டதின்படி கட்டணங்கள் நிர்ணயம் செய்தும் மற்றும் மேற்கண்ட அரசாணையில் விதி எண். 4-ல் குறிப்பிட்டுள்ளபடி மூன்று வருடம் என்பதை உரிமக்காலம் மூன்று ஆண்டுகள் நிர்ணயம் செய்தும், நிரந்தர விளம்பரங்கள் நிறுவ முறைப்படுத்துவதற்கான குழுவில் தீர்மானிக்கப்பட்ட பவானி நகராட்சி பேருந்து நிலையத்தில் விளம்பரம் செய்வதற்கான இடங்களை பொது ஏலம் விடவும் , மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஒப்புதல் பெறவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 1078/2019/எப்1)

4. இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்கள் மற்றும் கடைகளுக்கு 25.09.2019-ல் மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் ஏலம் கோர எவரும் வரவில்லை. ஒப்பந்தப்புள்ளி இரண்டு மட்டும் பழைய பேருந்து நிலைய கடை எண்.13க்கு பெறப்பட்டது. ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு.

| வ.எண். | பெயர் மற்றும் முகவரி | வைப்புத் தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | திரு.ஏ.அய்யாவு, 21, சேரன் நகர், கொமாரபாளையம் | D.D.No.869176 Dt.24.09.2019 I.O.B Komarapalayam, Rs.20000/- | 1850/- |
| 2 | திரு.ஆர். பி. பரணிதரன். த.பெ. கே.எஸ். பச்சியப்பன் 33E10, ராஜராஜன் நகர், கொமாரபாளையம் | D.D.No.869175 Dt.24.09.2019 I.O.B Komarapalayam, Rs.20000/- | 1500/- |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ஆர்.பி. பரணீதரன் என்பவர் மாத வாடகை ரூ.1850/- என கோரியுள்ளார். எனவே பழைய பேருந்து நிலைய கடை எண். 13ஐ மாதவாடகை ரூ.1850/ - அதற்குரிய GST 18% சேர்த்து பிரதிமாதம் 10 -ம் தேதிக்குள் வாடகை செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் , அரசாணை எண். 92 நகராட்சி

நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 03.07.2007-ன்படி திரு.ஆர்.பி.பரணிதரன் என்பவருக்கு உத்திரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.1707/2017/ அ2)

5. பவானி நகராட்சியில் அரசாணை எண். 101 (ந.நி.கு.வ.துறை) நாள் 30.04.1997ன் படி தேவையான துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை 177 ஆகும், ஆனால் இந்நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்டுள்ள துப்புரவு பணியாளர்களின் பணியிடங்களின் எண்ணிக்கை 86 ஆகும். தற்போது மேற்படி மொத்த பணியிடங்களில் 31 பணியிடங்;கள் காலியாக உள்ளது.

குறியீட்டின்படி தேவைப்படும் 177 துப்புரவு பணியாளர்களில் தற்பொழுது 55 நிரந்தர துப்புரவு பணியாளர்களும், தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் Outsourcing முறையில் 60 பணியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர். இந்நிலையில் 60 துப்புரவு பணியாளர்கள் வழங்கும் நிறுவனத்தின் ஒப்பந்த காலம் 31.10.2019 ஆம் தேதியுடன் முடிவடைகிறது. இந்நிலையில் இந்நகராட்சிக்கு கூடுதலாக 63 துப்புரவு பணியாளர்கள் பற்றாக்குறையாக உள்ளதாலும், அத்தியாவசிய துப்புரவு பணிகளான வீடு, வீடாக குப்பைகளை பிரித்து சேகரம் செய்தல், தெரு கூட்டுதல், சாக்கடை சுத்தம் செய்தல், பொதுக்கழிப்பிடம் சுத்தம் மற்றும் இதர பொது சுகாதார பணிகள் நகர் முழுவதும் முழுமையான அளவில் மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், பற்றாக்குறை துப்புரவு பணியாளர்கள் 63 எண்ணிக்கை பணியாளர்களை Outsourcing முறையில் ஒப்பந்த அடிப்படையில் எடுத்து பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்: K.Dis.No:28369/J3, Date: 04.12.2018-ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே, பொது சுகாதார நலன் கருதி மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு அவர்கள் நிர்ணயித்த (மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித ந.க.எண்: 12800/2019/G1, நாள்: 20.09.2019) ஊதிய (Collectrate Rate) விகிதமான நாள் ஒன்றுக்கு துப்புரவு பணியாளர் ஒருவருக்கு ரூ.490/- என்னும் ஊதிய விகிதத்தின் அடிப்படையில் கீழ்காணும் விபரப்படி செலவினக் கணக்கீடு தயார் செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்த அடிப்படையில் Outsourcing முறையில் துப்புரவு பணியாளர்களை ஒப்பந்ததாரர்களிடமிருந்து பெற்று பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**இதற்கான செலவின கணக்கீடு பின்வருமாறு:**

| | | |
|---|---|---|
| 1 | நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு கூலி ரூ.490/– வீதம் 63 நபர்களுக்கு 365 நாட்களுக்கு 490*365*63 | 11267550 |
| 2 | Statutory boards & பணியாளர்களுக்கு அடிப்படை வசதிகள், நிர்வாக செலவினத்திற்கு செலுத்த வேண்டிய சதவிகிதம் பின்வருமாறு | |
| 3 | ESI 3.25% | 366195 |
| 4 | EPF 13.00% | 1464782 |
| 5 | General Insurance Rs.550/- per person per month 63 persons | 34650 |
| 6 | நிர்வாக செலவினம் (Administrative charges 5%) | 563378 |
| 7 | Uniforms (Rs.2875 x 63) approximately | 181125 |
| 8 | Safety measures (Rs.3250 x 63) approximately | 204750 |
| | **ஆக மொத்தம்** | **14082429** |
| | **Rounded Off** | **140.825 lakhs** |

மேற்கண்ட கணக்கீட்டின்படி 63 துப்புரவு பணியாளர்களை வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் விநியோகிக்க (Outsourcing basis) திறந்த வெளி ஒப்பந்தப்புள்ளி அழைப்பு விடுக்கவும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் மன்றத்தின் பார்வைக்கு வைத்தும் அதற்கான செலவினம் ரூ.140.825/– இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. செலவினத்தை திடக்கழிவு மேலாண்மை பயனீட்டாளர் சேவை கட்டண வருவாய் மற்றும் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2255/2015/எச்1)

6. மாவட்ட ஆட்சித் தலைவர் ஈரோடு அவர்களின் கடிதம் ந.க.எண். 4172/2019/உதே, நாள் : 26.09.2019-ல் நடைபெற உள்ள உள்ளாட்சி தேர்தலுக்கான புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல்களை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளே ஒளிவுமறைவற்ற ஒப்பந்த புள்ளிகள் சட்டத்தின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி / விலைப்புள்ளி பெற்று 02.10.2019க்குள் அச்சிடுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி 30.09.2019 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் வருமாறு:

| | | |
|---|---|---|
| 1 | ஸ்ரீ குரு அச்சகம் மல்டிகலர் பிரிண்டர்ஸ், பைண்டிங் TAK பில்டிங், மேட்டூர் மெயின் ரோடு, பவானி. 638 301 | முன்பின் பக்கம் ஒன்றுக்கு ரூ.1.40 பைசா |
| 2 | ஸ்ரீ வாணி அச்சகம், 261, பழனியாண்டவர் கோவில்வீதி, பவானி 638 301 | முன்பின் பக்கம் ஒன்றுக்கு ரூ.1.20 பைசா |
| 3 | கலைமகள் பிரிண்டர்ஸ், 55 சோமசுந்தரபுரம், பவானி. | முன்பின் பக்கம் ஒன்றுக்கு ரூ.1.50பைசா |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் முன் பின் பக்கம் 1க்கு ரூ.1.20 பைசா கொடுத்துள்ள ஸ்ரீ வாணி அச்சகம் என்பவரின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மூன்று விலைப்புள்ளிகளில் ரூ.1.20 பைசா கொடுத்துள்ள விலைப்புள்ளி அரசு நிர்ணயித்துள்ளதை விட கூடுதலாக இருப்பதாலும் மாநில தேர்தல் ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ள காலகெடுவிற்குள் அச்சுப்பணியினை முடிக்க வேண்டியுள்ளதால் பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 0141/2019/பி1)

7. திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் தினமும் இந்நகரில் சேகரிக்கப்படும் கழிவுகளில் மக்கும் கழிவுகள் நுண்உரக்கூடத்தில் உரமாக்கப்பட்டு வருகிறது. மக்காத உள் கழிவுகள் தனியே சேகரித்து திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 இல் தெரிவித்துள்ளபடி மாற்று எரிபொருள் பயன்பாட்டிற்கு அனுப்பி இறுதியாக்கம் ( Final Disposal ) செய்து அப்புறப்படுத்த தினமும் 27வார்டுகளுக்கும் முதன்மை சேகரிப்புக்கு 25 கிலோ கொள்ளளவு கொண்ட 80 கித்தான் சாக்குபைகள் மற்றும் இரண்டாம் நிலை சேகரிப்பிற்கு 40-50 கிலோ கொள்ளளவு கொண்ட 25 கித்தான் சாக்குப்பைகளும் தினமும் தேவைப்படுகிறது.

இப்பணியினை 30.09.2019- ம் தேதிமுதல் 31.03.2020 தேதிவரை மேற்கொள்ளவும், மேற்படி கித்தான் சாக்குப்பைகளை கொள்முதல் செய்து உபயோகப்படுத்தி உலர்கழிவுகளை சேகரித்து அனுப்பி வைக்கவும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. இதற்கான செலவினம் ரூ.1.20 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

பொது சுகாதாரப்பணியின் அவசரஅவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1753/2015/எச்1)

8. இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு பணிபாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்யும் பணிக்கு ஆகும் செலவினத்திற்கு ஏற்கனவே இந்நகர்மன்ற தீர்மானம் எண். 137 நாள்:31.05.2019-ல் அனுமதி வழங்கியுள்ளதன் பேரில் இப்பணிக்கு 08.08.2019-ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **ஒப்பந்தப்புள்ளியாளரின் விபரம்** | **பணியின் விபரம்** | **அளவு** | **விலை விகிதம்** |
|---|---|---|---|---|
| 1 | M/s ஸ்ரீ சீரடி பாபா ஏஜென்சீஸ், 12/3டி-1, இரண்டாவது தளம், பாரதிதாசன் நகர், ஓசூர். | கையுறை | ஜோடி ஒன்றிற்கு | ரூ.300/- |
| | | ஒளிரும் சட்டை | ஒன்றிற்கு | ரூ.325/- |
| | | முகயுறை | ஒன்றிற்கு | ரூ.150/- |
| | | டார்ச் லைட் | ஒன்றிற்கு | ரூ.250/- |
| | | கம் பூட்ஸ் | ஜோடி ஒன்றிற்கு | ரூ.950/- |
| | | தொப்பி | ஒன்றிற்கு | ரூ.190/- |

| **வ. எண்** | **ஒப்பந்தப்புள்ளியாளரின் விபரம்** | **பணியின் விபரம்** | **அளவு** | **விலை விகிதம்** |
|---|---|---|---|---|
| 1 | M/s ஸ்ரீ விநாயகா ஏஜென்சீஸ், 1/1, ஆர்.கே.நகர், இரயில்வே ஸ்டேசன் எதிரில், ஓசூர். | கையுறை | ஜோடி ஒன்றிற்கு | ரூ.267/- |
| | | ஒளிரும் சட்டை | ஒன்றிற்கு | ரூ.317/- |
| | | முகயுறை | ஒன்றிற்கு | ரூ.139/- |
| | | டார்ச் லைட் | ஒன்றிற்கு | ரூ.240/- |
| | | கம் பூட்ஸ் | ஜோடி ஒன்றிற்கு | ரூ.900/- |
| | | தொப்பி | ஒன்றிற்கு | ரூ.185/- |

வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 2ல் கண்டுள்ள M/s ஸ்ரீ விநாயகா ஏஜென்சீஸ், 1/1, ஆர்.கே.நகர், இரயில்வே ஸ்டேசன் எதிரில், ஓசூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மற்றொரு ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தினை விட குறைவாக உள்ளதால் M/s ஸ்ரீ விநாயகா ஏஜென்சீஸ், 1/1, ஆர்.கே.நகர், இரயில்வே ஸ்டேசன் எதிரில், ஓசூர் அதனை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 70/2017/எச்1)

9. பவானி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 27 வரை உள்ள அனைத்து பகுதிகளிலும் பொது மக்களுக்கு தண்ணீர் வசதிக்காக பயன்படுத்தி வரும் மினிபவர் பம்புகள், பவர் பம்புகள் மற்றும் பொது கழிப்பிடங்களில் தண்ணீர் வசதிக்காக பயன்படுத்தும் ஏர்கம்ப்ரசர்களில் ஏற்படும் பழுதுகளை சரி செய்ய 2019-20 -ம் நிதி ஆண்டிற்கு ஆண்டு பராமரிப்பு பணி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குடிநீர் நிதியிலிருந்து செலவை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1236/2019/இ1)

10. வார்டு எண்.17 அம்மன் லே அவுட் பகுதியில் உள்ள வளமீட்பு மையத்தில் கூடுதல் பணிகள் செய்தல் , பணிக்கு மதிப்பீடு 1.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.193, நாள்:30.08.2019 அனுமதி அளித்துள்ளதன் பேரில் 20.09.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும். முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.எஸ். பாலசுப்பிரமணியன், பவானி | 0.28% குறைவு | மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திரு. பி.ஏ. செல்லப்பன், பவானி | 1.95% அதிகம் | மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட 0.28% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ். பாலசுப்பிரமணியன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். 1045/2019/இ1)

11. வார்டு எண்.11 மேட்டூர் மெயின் ரோட்டில் உள்ள ஆணையர் குடியிருப்பு பராமரிப்பு செய்தல் , பணிக்கு மதிப்பீடு 1.75 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.192 நாள்:30.08.2019 அனுமதி அளித்துள்ளதன் பேரில் 20.09.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும். முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|---|
|  | திரு. பி.ஏ. செல்லப்பன், பவானி | 0.22% குறைவு | மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 1 | திரு.எஸ். பாலசுப்பிரமணியன், பவானி | 2.05% அதிகம் | மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட 0.22% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. பி.ஏ. செல்லப்பன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். 1044/2019/இ1)

12. பவானி நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள தரைமட்ட தொட்டிகளை சுத்தம் செய்ய நீர் மூழ்கி மின்மோட்டார் சப்ளை செய்தல் மற்றும ஆற்று நீருந்து நிலையத்தில் மோட்டார் எண். 1-ல் foot Valve வில் ஏற்பட்டுள்ள அடைப்பினை சரி செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.0.60 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண். 194, நாள்: 30.08.2019 அனுமதி அளித்துள்ளதன் பேரில் 20.09.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும். முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1 | M/s. Guru Electrical Works Erode . | 0.33% குறைவு | மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | M/s. SreeVel Electrical Erode | 1.35% அதிகம் | மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட 0.33% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Guru Electrical Works .அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். 1070/2019/இ1)

13 பவானி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யக்கூடிய தலைமை நீரேற்று நிலையத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கு கழிப்பிட வசதி ஏற்படுத்தும், மற்றும் பராமரிப்பு பணிகள் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குடிநீர் நிதியில் பணியை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1148/2019/இ1)

14. பவானி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்தவும் ஏற்கனவே உள்ள மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை இரண்டாம் கட்டமாக மராமத்து பணி செய்தல் , பணிக்கு மதிப்பீடு 3.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.191,நாள்: 30.08.2019 அனுமதி அளித்துள்ளதன் பேரில் 20.09.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.எஸ். பாலசுப்பிரமணியன், பவானி | 0.18% குறைவு | மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திரு. பி.ஏ. செல்லப்பன், பவானி | 1.10 % அதிகம் | மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட 0.18% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. திரு.எஸ். பாலசுப்பிரமணியன், பவானி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். 1037/2019/இ1)

15. இந்நகராட்சிப்பகுதியில் டெங்கு காய்ச்சல் பரவாமல் இருக்கவும், கொசுக்களால் பரவும் நோய்களை கட்டுப்படுத்திட முதிர்ந்த கொசுக்களை ஒழிக்கும் பணிக்கு வாகனத்தின் மூலம் புகைதெளிக்கும் இயந்திரம் ( Vehicle Mounted Fogging Machine ) ஒரு எண்ணிக்கை புதியதாக கொள்முதல் செய்து நோய் தடுப்பு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே வாகனத்தின் மூலம் புகைதெளிக்கும் இயந்திரம் புதியது ஒன்று வாங்கிக்கொள்ள மன்ற அனுமதியும், இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.6,00,000/- க்கும் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.1267/2019/எச்1)